**மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண். 12 /2024 வா.சா.1**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 16–ம் நாள் திங்கள்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: அழகு தந்தை பெயர்: பெருமாள்

---

**16.03.2026:**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

1. தாவாச் சொத்தின் சர்வே எண் 52/12 ஏ ஆகும். மொத்தம் 20 செண்டாகும். அதில் எனக்கு 10 செண்டு, எனது அண்ணனுக்கு 10 செண்டாகும். பெருமாளுக்கு வாரிசு பெருமாள், அழகு ஆகும். மேற்படி பெருமாள், அழகு பாகபிரிவினை செய்து கொண்டதற்கு ஆவணங்கள் இல்லை . பெருமாள் மகன் பெருமாளுக்கு 3 நபர்கள் வாரிசுகள் ஆவார். பெருமாள், அழகன், செல்வம் ஆகும். அழகு , பொன்னம்மாள் பெருமாளின் மக்கள் ஆவார்கள் . பெருமாள் மகள் வாதி அழகுயாகிய எனக்கு கருப்பையா, அழகு ராஜ் , வெள்ளைச்சாமி, அழகு, சின்னப்பொட்டு,பெருமாத்தாள் வாரிசுகளாவார்கள். மேற்படி 11 நபர்களுக்கும் 10 செண்டு பிரிக்கப்படாத சொத்து என்றால் சரிதான்.

2. எனக்கு தானசெட்டில்மெண்ட் பெருமாள் மகன் அழகு 2 வருடத்திற்கு முன்பாக தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் . என்ன உறவுமுறையை காண்பித்து தானசெட்டில் மெண்ட் எழுதப்பட்டது என்று தெரியாது . தாவாச் சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது அனுபவத்தில் உள்ளது. தாவாச் சொத்தில் தென்னைமரம் –3, மாமரம்–2 அதில் ஒன்று வெட்டப்பட்டது . மரம் இருப்பதையும், வெட்டிய விவரத்தையும் பிராதில் சொல்லவில்லை என்றால் வெட்டிய விவரத்தை சொல்லியுள்ளேன். நான் சொத்தை அனுபவிக்காததால் மரம் இருக்கிற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல . தற்போதும் தாவாச்சொத்தில் தென்னைமரம்–3, மாமரம்–1, வேப்பமரம் உள்ளது என்றால் சரிதான்.

3. 10 செண்டிற்கு இடையே வரப்பு உள்ளது என்றால் சரிதான் . மேற்படி 10 செண்டு பிரித்து கொடுக்கப்பட்டது என்பதற்கு பாகப்பிரிவினைப்பத்திரம் தாக்கல்செய்யவில்லை. செல்லாத இனாம், செட்டில்மெண்ட் அடிப்படையில் எனக்கு

வழங்கப்பட்ட பட்டா செல்லாது என்றால் எனக்கும் , எனது அண்ணன் மகனுக்கும் கூட்டு பட்டா ஏற்பட்டது அதன் அடிப்படையில் 5 செண்டு பிரித்துக்கொண்டோம்.

4. எனது பிராதில் வழக்கின் வாதியின் தகப்பானருக்கு சொந்தமான சொத்து என்று சொல்லியுள்ளேன். ஆனால் பிராதில் பூர்வீகச் சொத்தா , தனிப்பட்ட சொத்தா என்று சொல்லவில்லை. பூர்வீக சொத்தாகும். தாவாச்சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றாலும் , அனுபவத்தில் இல்லாத சொத்திற்கு நிரந்தர உறுத்து கட்டளைக்கோர இயலாது என்றால் சரியல்ல . தாவாச்சொத்து எனது அனுபவத்தில் இருந்திருந்ததால் வரி , இரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல . பிரிக்கப்படாத பொது சொத்திற்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல . தாவா வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.